

இலங்கை மணித்திரு நாட்டில்,

தென்மராட்சி உசனைப் பிறப்பிடமாகவும்

வடமராட்சி வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சிவஞானசுந்தரம் ஞானலட்சுமி

அவர்கள் சிவபதப்பேறு எய்தியமை குறித்த

# நினைவு ஜோதி

16.06.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

அன்பிற்கு தெய்வமாய்
ஆற்றலுக்கு ஆதரவாய்
பண்பிற்கு இலக்கணமாய்
கொடைக்கு சிறந்த தாயாக
ஆழ அறிவூட்டி வழிகாட்டி
எம்மையெல்லாம் வாழவைத்த
எமது குடும்ப குல விளக்கு
அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு இந்நூலை
சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு

1948 * 12 * 14

உதிர்வு

2009 * 05 * 17

# அமரர்
# சிவஞானசுந்தரம் – தனலட்சுமி

திதி நிர்ணய வெண்பா

ஆய வைகாசி மாத மாண்பான அபரபக்க அட்டமி
கூடிய ஞாயிறு தனில்
தன்மதிவதனத்தார் சிவஞானசுந்தரம்
தனலட்சுமி இறை அடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப்பாக்கள்



திருச்சிற்றம்பலம்

**விநாயகர் துதி**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை
இந்து னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்தனை யானைக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினு(ம்) மனத்து(ம்) மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பால்னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய் மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் நளக்குச்
செம்மையே யால சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே என்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பானித் தெருவே
ஐயா நீயுலாப் போந்தவன்று முதலின்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணொரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள் கோடைத்திரை லோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுற
கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுக
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா ஞான சற்குரு நாதா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்திநி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப் பயணத்திலே.........

இந்துமாகடல் சூழ் எழில் முத்தாய் திகழ்கின்ற இலங்காபுரி திருநாட்டின் ஈழத்தின் வடபால் அமைகின்ற சிகரமென விளங்குவது யாழ்ப்பாணக்குடா நாடு. இந்நாட்டின் தெற்கே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை இன்பங்களில் மருதநில இன்பம் தனிச்சிறப்புடையதாகும். இவ்வின்பமளித்த தென்மராட்சியில் கல்வியும் செல்வமும், விவசாய செழிப்பும், வானுயர் பயன் மரங்களும் தளராவளர் தெங்குகளையும், கற்பகத்தருவாகிய பனைகளையும், பச்சைப் பசேல் என்ற வயல் வெளிகளையும், அழகுறு ஆலயங்களையும் கொண்டு விளங்குவது உசன் கிராமம்.

இக்கிராமத்தில் உயர் வேளாள மரபிலே உயர் பண்புகள் அனைத்தும் நிரம்பப் பெற்ற தாமோதரம்பிள்ளை சின்னம்மா தம்பதியினருக்கு இரண்டாவது மகளாக தனலட்சுமி பிறந்தார். இவரை எல்லோரும் செல்லமாக "கிளி" என்று அழைப்பார்கள்.

இவர் அறிவும், பண்பும் மிக்கவராக வளர்ந்து உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்வியை மிக ஆர்வத்துடன் தொடர்ந்தார். இவர் பின்பு தனது கல்வியை இடைநிறுத்தி தமது வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தார்.

பின்பு இவருடைய பெற்றோர்கள் இவருக்கு திருமணம் செய்ய நிச்சயித்தார்கள். வல்வெட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவக்கொழுந்து தம்பதிகளின் மூத்தமகனான சிவஞானசுந்தரத்தை இவருக்கு ஏற்ற துணைவனாகக் கருதி நிச்சயித்து 1982ம் ஆண்டு ஆனி மாதம் 7ம் திகதி திருமணம் செய்து வைத்தனர். பின்பு இவர் தொடர்ந்து வல்வெட்டி எனும் கிராமத்தில் தனது இல்லற வாழ்வை நடாத்தினார்.

இத்தம்பதிகளின் இல்லறம் எனும் நல்லறத்தின் நற் பயனாக நிசாலினி, கஜந்தன், கோகுலன், நிறோஜினி, நிமாலினி ஆகிய அன்பு மக்களைப் பெற்றெடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது நோய்கள் எதிலும் கவனம் செலுத்தாது பிள்ளைகளின் வளர்ச்சிலும், கல்வியிலும் மிகுந்த அக்கறை செலுத்தினார். இதன் பயனாக மூத்த மகளாகிய நிசாலினி உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் உயர் தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்றார். பின்பு இவர் திருமண வயதை அடைந்ததும் இவருக்கு திருமணம் செய்ய நிச்சயித்தார்கள். அதே இடத்தினை சேர்ந்தவரும் கனடாவில் வசிப்பவருமான சுப்பிரமணியம் இராஜேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகனான கணேஸ்வரனை திருமணம் செய்து வைத்தனர். இவர்களது இனிய இல்லறத்தின் பேறாக பிறீத்திகா எனும் பேரப்பிள்ளையை கண்டு களித்தார்.

மூத்த மகனான கஜந்தன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்றார். இரண்டாம் மகனான கோகுலன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தி அடைந்துவிட்டு நாட்டின் சூழ்நிலை காரணமாக கொழும்பு சென்று வெளிவாரியாக கொழும்பு தொழில்நுட்பக்கல்லூரியில் இலத்திரனியல், மின்னியல் சம்பந்தமாக கல்வி கற்று பின்பு வெளிநாடு சென்றார். இரண்டாம் மகளான நிறோஜினி தமது 5ம் ஆண்டு வரை யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தில் கல்வி கற்று அதன் பின்பு யா/ வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் க.பொ.த சாதாரணதரம் வரை படித்து பின்பு உயர்தரத்திற்காக உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கணிதத்துறையில் கல்வி கற்றார். பின்பு பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பூகோள விஞ்ஞான பீடத்தில் அளவையியல் விஞ்ஞான கற்கை நெறியில் கல்வி கற்று வருகிறார். இளைய மகளாகிய நிமாலினி வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தில் கல்வி கற்று பின்பு க.பொ.த சாதாரண தரம் வரை யா/ வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்றார். பின்பு உயர்தரத்திற்காக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கலைப்பிரிவில் கல்வி கற்று வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61 ஆண்டுகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த தனலட்சுமி நோய் காரணமாக யாழ்ப்பாண வைத்தியசாலையில் 13/05/2009 புதன்கிழமை அன்று அனுமதிக்கப்பட்டு 17/05/2009 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

## விட்டமின்கள்

| கண்டுபிடித்த ஆண்டு | பயன் | குறைவால் ஏற்படும் நோய் | விட்டமின்கள் உள்ள உணவுப் பொருட்கள் |
|---|---|---|---|
| 01. விட்டமின் A (1913) | நல்ல கண்பார்வை, தோல் வளர்ச்சி, நோய் எதிர்ப்புத் திறன் | கண்நோய் | பச்சைக் காய்கள் மற்றும் கீரை, மீனெண்ணை |
| 02. விட்டமின் B1 (1936) | ஆரோக்கியமான நரம்பு அமைப்பு, மூளை வளர்ச்சி பசி உணர்வு | நரம்புத் தளர்ச்சி, பெரிபெரி நோய், மூளைவளர்ச்சி குன்றல். | பருப்பு வகைகள், கரட், எள், வேர்க்கடலை, ஈஸ்டு முட்டை, பால், இறைச்சி |
| 03. விட்டமின் B2 (1935) | செல் மற்றும் திசு வளர்ச்சி கொழும்பு மற்றும் அமினோ அமிலங்கள் எரித்து சத்தியாக மாற்ற | கண்சிகப்பு, வாய்ப்புண் | பருப்புக்கள், பச்சை இலைக்காய்கள், பால், முட்டை, ஈரல், இறைச்சி |
| 04. விட்டமின் B6 (1934) | அமினோ அமிலங்களில் இருந்து கார்பொஹைட்ரேட்டை வெளியேற்றுதல். | கண்பார்வைக் குறைவு | பருப்பு மற்றும் கீரை வகைகள், ஈரல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 05. விட்டமின் B12 (1948) | இரத்தச் சோகை தடுப்பு | அனீமியா | இறைச்சி, பால், முட்டை, மீன், ஈரல் |
| 06. விட்டமின் C (1919) | பல்உறுதி, இரத்தக் கசிவு எதிர்ப்பு | ஸ்கார்வி (பல்நோய்) தடுப்பு, மலச்சிக்கல், சோர்வு | சிட்ரஸ் பழங்கள் (நெல்லி, எழுமிச்சை), பச்சை நல்லமிளகு, பச்சைக் காய் மற்றும் கீரை வகைகள், பருப்புக்கள் |
| 07. விட்டமின் D (1925) | பல் மற்றும் எலும்பு வளர்ச்சியின்மை | எலும்புருக்கி நோய் | ஈரல், வெண்ணெய், கொழுப்பு மிக்க மீன், முட்டை, பால் |
| 08. விட்டமின் E (1936) | இரத்தச்சோகை இருதய நோய் குறைப்பு தசை வளர்ச்சி | ஆண்மைக்குறைவு, குறைப்பிரசவம் | ஈரல், கிட்னி, வெண்ணெய், முட்டை மஞ்சள் கரு, பச்சை காய் மற்றும் கீரை வகைகள், தாவர எண்ணெய் |
| 09. விட்டமின் K (1935) | இரத்த ஒழுக்கை நிறுத்துகிறது | இரத்தப்போக்கு அனிமிக் | சோயாபீன், எண்ணெய், கீரை, சோளம், பழங்கள், பால் |
| 10. ∴போலிக் அமிலம் | இரத்த சிவப்பனுக்கள் வளர்ச்சிக்கு | இரத்தச் சோகை ஆண்மைக் குறைவு | ஈரல், முட்டை, கீரைகள் |
| 11. நியாஸின் | புரோட்டீன் மற்றும் கொழுப்பு சக்தியாக மாற்ற, நொய் எதிர்ப்பு | தோல் வெடிப்பு மனநோய் | பருப்பு வகைகள், இறைச்சி, மீன், முட்டை, சோளம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டுச் செலவு (கல்லெடுப்பு அல்லது பாஷாணோத்தாபனம்)

எட்டுச் செலவு என்ற கிரியை பத்ததி, ஆகமங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்படவில்லை. தேசவழமையில் உள்ள கிரியை ஆகும். இது இறந்த நாளிலிருந்து ஏழாம் நாளில் செய்யப்படும். தேவைகருதி ஐந்தாம் நாள் செய்யப்படுவதுமுண்டு. இறந்தவர் விரும்பியுண்ட உணவு வகை யாவும் படைக்கும் பேருணவுப் படையல் படைத்து தீபம் காட்டி அவ்வுணவு வகைகளில் சிறுபகுதியை எடுத்து தீப்பந்தம், இளநீருடன் சந்தியில் வைக்கும் வழக்கம் உண்டு. இவற்றைப் பூத பைசாசுகள் உண்ணும் என்னும் ஐதீகம் காணப்படுகின்றது.

இது பகல் வேளையில் நடைபெறும். சில இடங்கில் இரவு வேளைகளில் நடத்துவர். இதில் மாமிச உணவு, மதுபானம் என்பன படைத்தல் தவறு. இறந்தவர் ஆத்மா சிவலோக யாத்திரை செய்யும் போது கடமை செய்தவரும், வீடும் புனிதமாக இருக்க வேண்டும். எட்டுச் செலவு வரை வீட்டில் எண்ணெயில் பொரித்து உணவு வகை தயாரிப்பதில்லை.

## அந்தியேஷ்டி

அந்தியேஷ்டி என்பது இறுதியாகச் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்தியேஷ்டியினால் சமய ஆசார, அனுட்டானத்தில் ஏற்பட்ட குறைகள் நிவர்த்தியாகும்.

அந்தியேஷ்டி சமய அந்தியேஷ்டி, விசேட அந்தியேஷ்டி, நிர்வாண அந்தியேஷ்டி என மூன்று வகைப்படும். இது சமய, விசேட, நிர்வாண தீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவர்களுக்கு அவர்கள் பெற்ற தீட்சை வகையில் செய்யப்படும். விஷேட நிர்வாண அந்தியேஷ்டியும் சைவ ஆசாரமுடைய புலால் உண்ணாத, சமய தீட்சை உடைய சைவர்களுக்கு செய்யப்படும் சமய அந்தியேஷ்டியும் சுடலையில் (மயானத்தில்) செய்யப்படும். ஏனையோருக்குச் செய்யப்படும் சமய அந்தியேஷ்டி ஆசௌச முடிவில் 31 ஆம் நாளில் செய்யப்படும். இதை இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் என்பர். மகன் தவிர்ந்த ஏனையோர் கடமை (கொள்ளி வைத்தல்) செய்தால் அந்தியேஷ்டி (தர்ப்பை சுடுதல்) நாட் பார்த்து தான் செய்ய வேண்டும். நந்தை, பத்ரை, திரயோதசி, தவிர்ந்த திதிகளும், செவ்வாய், வியாழன், வெள்ளி தவிர்ந்த வார லக்கினங்களும் திரிபால நட்சத்திரம் தவிர்ந்த ஏனைய நட்சத்திரங்களிலும் பாபக்கிரகம் பலமுண்டான சமயத்தில் இக்கருமம் செய்யலாம். (கால விதானம்) நந்தை - பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி, பத்ரை, துதியை, ஸப்தமி, துவாதசி, திரிபாத நட்சத்திரம் - கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி 26ஆம் நாளுக்கு மேல் 31 ஆம் நாள் வரையில் செய்யலாம்.

சுடலை, ஆற்றங்கரை, குளக்கரை, சமுத்திரக்கரை, வீடு (கிணற்றடி) ஆகிய இடங்களில் அந்தியேஷ்டி செய்வதற்கு உகந்த இடங்களாகும். ஒன்பது முழம் முதல் குறைந்த பட்சம் ஐந்து முழ நீள அகலங் கொண்ட மண்டபம் அமைத்தல் வேண்டும். இம் மண்டபத்திற்கு பதினாறு அல்லது நான்கு கால்கள் அமைய வேண்டும். விதானம், தோரணம், பூமாலைகளால் அலங்கரித்து மேலே வெள்ளை கட்டி நான்கு திசைகளிலும் வாயில் அமைத்து, தெற்கில் பிரதான வாயில் அமைத்து சாணத்தினால் நிலத்தை மெழுகி மண்டபத்தை ஒன்பது பதமாக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுப்பக்கத்தில் ஓமகுண்டமும், வடமேற்கில் சிவகும்பமும், வட கிழக்கில் வர்த்தனி (பாசுபதாஸ்திர) கும்பமும், தென்மேற்கில் பஞ்சகௌசிய மேடையும், தென்கிழக்கில் சிதாவஸ்து தானம் (பிரேத தகன இடம்) ஆகியவற்றையும் சுற்று வேதிகையில் (மண்டபத்தின் சுற்றுப்புறத்தில்) தசாயுத குடும்பங்களையும் அமைத்துக் கொள்ளவும்.

சிதாவஸ்து தானத்தை வடக்குத் தெற்காக நீண்ட சதுரமாக்கி இருபத்தைந்து பதமாகப் பிரித்து, நடுப்பதம் ஐந்திலும் மஞ்சள் மாவும், தென்மேற்கில் நான்கு பதத்தில் வெள்ளை மாவும், தென்கிழக்கில் நான்கு பதத்தில் சிவப்பு மாவும், வடமேற்கில் நான்கு பதத்தில் கறுப்பு மாவும், வடகிழக்கில் நான்கு பதத்தில் பச்சை மாவும், வடக்கிலுள்ள ஒரு பதத்தில் சிவப்பு மாவும், கிழக்கில் உள்ள ஒரு பதத்தில் மஞ்சள் மாவும், தெற்கிலுள்ள ஒரு பதத்தில் கறுப்பு மாவும் இட்டுக்கொள்ளவும்.

புத்தளிகை (பிரேதம் போலச் செய்யும் தருப்பை) முப்பத்தாறு தர்ப்பைகளால் முறுக்கி இடப்பக்கமாக முடிந்து ஐவைந்து தர்ப்பைகளால் கைகளும் பதின்மூன்று தர்ப்பைகளாகப் பிரித்து கால்களையும் ஆக்க வேண்டும்.

ஆசிரியர் நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து தெற்கு வாயிலால் மண்டபத்துட் புகுந்து (சிவகும்ப வேதிகைக்குத் தெற்கே வடக்கு நோக்கி இருந்து) கர்த்தாவுக்குத் திருநீறு கொடுத்து சங்கற்பம் செய்து கொண்டு சளீசரணம், பூதசுத்தி, மந்திரசுத்தி, அந்தர் யாகம் சிவகஸ்தம் செய்து சிவோகம் பாவனை முடித்து ஞானகட்கதாரணம் செய்தல் வேண்டும். பஞ்சகௌவிய பூசை முடித்து, யாக மண்டபத்தையும், கர்த்தாவையும் புத்தளிகையையும், பஞ்சகெயவியத்தால் (புரோட்சித்தல்) தெளித்தல் வேண்டும். சூர்ணோற்சவம் செய்து சுண்ணப்பொடி சாத்திப் புத்தளிகைக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். பதினெட்டு சமஸ்காரங்களையும் மனத்தினாலே செய்து நெற்பொரி முதலியவற்றை மண்டபத்தில் தூவி மிகுதியை ஈசானத்தில் பாகபதாஸ்திர வர்த்தனி ஆசனத்தில் இடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

சொல்லி வைத்தா நாம்
பிறந்தோம்
சொல்லிக் கொண்டு
இறப்பதற்கு
இவ்வுலகில் ஓர் நாள்
எல்லோர்க்கும்
இன்நிலமை உண்டென்று
தானறிந்தே தேற்றிடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் இதயங் கனிந்த நன்றிகள்

எங்கள் குடும்பத் தலைவியினது அமரத்துவச் செய்தி கேட்டு, நேரில் சமூகமளித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், நேரில் சமூகமளிக்க முடியாதவர்கள் தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் இன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வேவில், வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

தாமோதரம்பிள்ளை + சின்னம்மா

- பொன்னம்பலம்
- இராசரத்தினம்
- விஜயலட்சுமி
- தனலட்சுமி
  - நிசாலினி + கணேஸ்வரன்
    - பிறீத்திகா
  - கஜந்தன்
  - கோகுலன்
  - நிறோஜி
- விஜயரத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சாவழி

சுப்பிரமணியம் + சிவக்கொழுந்து

விஜயரத்தினம் அன்னலட்சுமி

இராஜேஸ்வரி
மங்கையக்கரசி
சிவஞானசுந்தரம்
சோதிலிங்கம்
செல்வச்சோதி
பாக்கியம்
தேவமனோகரி
ரதிதேவி
சிவகுமார்
அமிர்தலிங்கம்
இராஜேஸ்வரன்

நிறோஜினி நிமாலினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருக்கிறாய்,
அதை வீணாக்குவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொவருடையதாகும்
இந்த மாற்றமே உலக நியதியாகும்.



ஒளியருவி விடியோ அன் போட்டோ
021-2264006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org